**மேல் மாகாண சபை 2015**

---

மேல் மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையானது மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின்படி வழங்கப்படுகின்றது. இந்த அறிக்கையில் காணப்படுகின்ற அவதானிப்புகள் தொடர்பாக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விரிவான அறிக்கையொன்று காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மேல் மாகாண சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியக் கணக்கு

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியக் கணக்கு 2016 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

2016 யூலை 15 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2015 ஆம் ஆண்டிற்குரிய | | |
|---|---|---|---|---|
| | | **கணக்குகளின் மொத்த எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை** |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 27 | 27 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 30 | 30 | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 27 | 27 | - |
| (vi) | வர்த்தக முற்பணக் கணக்குகள் | 02 | 01 | 01 |
| (v) | ஏனைய முற்பணக் கணக்குகள் | 06 | 06 | - |
| (vi) | நிதியக் கணக்குகள் | 05 | 05 | - |
| (vii) | நியதிச்சட்டக் கணக்குகள் | 09 | 04 | 05 |
| | **மொத்தம்** | 106 | 100 | **06** |

#### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகளின் படி நிலையான சொத்துக்கள் மற்றும் நிலுவை வருமானங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், தலைப்புக்களின் படி மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா

2,899,489,138 நிலையான சொத்துக்களும் வருமானத் தலைப்புக்களின் படி மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 8,276,882,994 நிலுவை வருமானங்களும் காணப்பட்டன.

### 2.2.4 நிதியங்களை பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் 05 செலவின தலைப்புக்களிற்குரிய 12 செலவின விடயங்களிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,624,100 நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தேறிய நிதி ஏற்பாடுகளின் கீழ் 05 செலவின தலைப்புகக்ளில் 24 சந்தர்ப்பங்கள் தொடர்பில் ரூபா 219,372,884 அல்லது 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) காசு, முத்திரைகள் காணாமல் போவதை கணக்கீடு செய்யும் முற்பணக் கணக்கு – 10903 ஆம் விடய இலக்கத்தின் கீழ் மீளாய்வாண்டு தொடர்பில் ரூபா 03 மில்லியன் ஆகக்கூடிய செலவின எல்லையும் ரூபா 04 மில்லியன் ஆகக்கூடிய வரவு மீதி எல்லையும் விதிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது அதிலிருந்து முற்பணங்களை வழங்குவதற்கான தேவை ஏற்பட்டிருக்கவில்லை. இதன் கீழ் 2014 ஆம் ஆண்டில் மஹர பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 915,786 முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்படாது காணப்பட்டது.

(ஈ) உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்களிற்காக மோட்டார் சைக்கிள் கடன்களை வழங்குதல் - 10904 ஆம் விடய இலக்கத்திற்கான முற்பணக் கணக்கு – 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அத்திகதியிலிருந்து ஆகக்கூடிய செலவின எல்லையின் கீழ் ரூபா 2,850,000 கூட்டுத்தொகை பெறுமதி விதிக்கப்பட்டு காணப்பட்ட போதிலும். மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிலிருந்து கடன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்கிணங்காமை

உள்ளூராட்சி திணைக்களத்திற்குரிய பொது வைப்பு மீதியின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியளவில் திணைக்களத்தின் புத்தகத்தின் படியான மீதிக்கும் மாகாண திறைசேரி புத்தகத்தின் படியான மீதிக்கும் இடையே ரூபா 6,122,459 கணக்கிணங்காமை காணப்பட்டது.

### 2.2.6 கட்டுநிதி

மாகாண திறைசேரி புத்தகங்களின் படி மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 நிறுவனங்கள் தொடர்பில் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 410,812,351 ஆகக் காணப்பட்டதுடன், அது 07 நிறுவனங்களிற்குரிய ரூபா 409,487,380 கூட்டுத்தொகையான வரவு மீதியினையும் 03 நிறுவனங்களிற்குரிய ரூபா 1,324,971 கூட்டுத்தொகையான செலவுமீதியினையும் உள்ளடக்கியிருந்தது.

### 2.2.7 தீர்ப்பனவுகள்

மாகாண திறைசேரி புத்தகங்களின் படி மீளாய்வாண்டின் இறுதியளவில் 08 நிறுவனங்கள் தொடர்பில் தீர்க்கப்படாதிருந்த தீர்ப்பனவு மீதியின் மொத்தம் ரூபா 59,156,435 ஆகக் காணப்பட்டதுடன், அது 06 நிறுவனங்களிற்குரிய ரூபா 58,921,935 கூட்டுத்தொகையான வரவு மீதியினையும் 02 நிறுவனங்களிற்குரிய ரூபா 234,500 கூட்டுத்தொகையான செலவுமீதியினையும் உள்ளடக்கியிருந்தது.

**2.2.8 முற்பணக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் இனவிருத்திப் பொருட்கள் முற்பணக் கணக்கு – 12002 ஆம் விடய இலக்கத்தின் ஆகக் கூடிய வரவு மீதி எல்லை ரூபா 2,290,000 ஆகக் காணப்பட்ட போதிலும், மாகாண திறைசேரிப் புத்தகத்தின் படி பெறுமதி ரூபா 7,089,274 செலவு மீதியாகக் காணப்பட்டது.

(ஆ) மாகாண சபை உத்தியோகத்தர்களின் 25 முற்பணக் கணக்குகள் மற்றும் சபை உறுப்பினர்களின் 02 முற்பணக் கணக்குள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதியளவில் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 267,807,061 கூட்டுத்தொகையாகக் காணப்பட்டது. அதில் ஒரு ஆண்டிற்கும் மேலாக அறவிடப்படாது காணப்படுகின்ற மீதிகள் முறையே ரூபா 188,944,846 மற்றும் 41,113 கூட்டுத்தொகையாகக் காணப்பட்டது.

(இ) 05 பிரதேச செயலகங்கள் தொடர்பில் மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டிலிருந்து நிலவி வருகின்ற தீர்க்கப்படாதுள்ள மாகாண சபை உத்தியோகத்தர்களிற்கான கடன் மற்றும் முற்பண மீதிகளின் மொத்தம் ரூபா 303,954 ஆகக் காணப்பட்டது.

**2.2.9 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு வலயக் கல்வி அலுவலகங்களின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திலுள்ள ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த சம்பளமற்ற விடுமுறைகளின் பெறுமதி ரூபா 864,837 ஆகும்.

(ஆ) கொழும்பு வலயக் கல்வி அலுவலகங்களின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலவிடப்படாது காணப்பட்ட ரூபா 8,364,199 தர உள்ளீட்டுத் பணத்தொகையினை 2015 ஆம் ஆண்டில் பாடசாலைகளிலிருந்து பெற்று வலய அலுவலக பொது வைப்பு என கணக்கு வைக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதிலிருந்து ரூபா 5,160,980 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(இ) 06 நிறுவனங்கள் தொடர்பில் வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளைத் தாண்டியும் தீர்க்கப்படாதுள்ள வைப்புக்களின் பெறுமதி ரூபா 13,946,066 ஆகும்.

**2.2.10 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் விடயங்கள் தொடர்பில் போதியளவு சான்றுகள் அல்லது தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டில் கொழும்பு வலயக் கல்வி அலுவலகங்களினால் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,045,325 பொருட்களிற்கும் மற்றும் கொழும்பு வலயக் கல்வி அலுவலகங்களினால் கருதுகோள் அடிப்படை மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,162,172 பொருட்களிற்கும் உரித்தான பொருள் பெறுவனவுக் குறிப்புக்கள் (GRN) மற்றும் பொருள் வழங்கல் குறிப்புக்கள் (GIN) என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2016 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 07 நிறுவனங்களிற்குரிய 48 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.11 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

(அ) மேல் மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதிக் கோவை 2008

(i) மாகாண நிதி ஒழுங்குவிதி 157(2) இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் தொகையானது இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் ரூபா 1,000 என்ற தொகை எழுத்தில் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) மாகாண நிதி ஒழுங்குவிதி 169(1) மற்றும் 177 என்பவற்றின் பிரகாரம் சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரினால் அனைத்து உறுதிச்சீட்டுக்களும் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கல்வி, கலாச்சார மற்றும் கலை அலுவல்கள், விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகார, தகவல் தொழில்நுட்ப அமைச்சின் ரூபா 4,393,947 பெறுமதியான 06 உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தப்படாது செலுத்தப்பட்டிருந்தன.

(iii) மாகாண நிதி ஒழுங்குவிதி 476 இன் பிரகாரம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்காக கொழும்பு வலயக் கல்வி அலுவலகங்களில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 7/2013 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை

களுத்துறை கல்வி வலயத்திற்குரித்தான ஞானோதய வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் காசுப் புத்தகத்தின் படி 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,270,188 காசு மீதி காணப்பட்டது. அதற்கு மேலாக மே.மா./கம்/பண்டாரவத்த பராக்கிரம வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் கணக்கில் மாதந்தோரும் ரூபா 3,690,207 மற்றும் ரூபா 6,783,750 வீச்சில் காசு கையிருப்பு காணப்பட்டது. இக் காசினை மேற்படி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 இன் 01 ஆம் இலக்க முன்பள்ளி கட்டளைச்சட்டம்

(i) கட்டளைச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேல் மாகாணத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற அனைத்து முன் பள்ளிகளையும் பதிவுசய்வதற்கும் தகவல் முறைமையொன்றை பேணி வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். 2015 நவம்பர் மாதமளவில் மேல் மாகாணத்தில் அவ்வாறு பதிவுசெய்யப்பட்டிருக்காத முன் பள்ளிகளின் எண்ணிக்கை 381 என்பது கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

(ii) கட்டளைச்சட்டத்தின் III ஆம் பிரிவிலுள்ள 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கல்வி அமைச்சரினால் முன் பள்ளி ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 சனவரி 28 கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் அவ்வாறான குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கட்டளைச்சட்டத்தின் IV ஆம் பிரிவிலுள்ள 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி முன் பள்ளி அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் நிதியமொன்று தாபிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஜனவரி 28 கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் அவ்வாறான நிதியம் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 திசெம்பர் 05 ஆந் திகதிய 35/2014(1) ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை

சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் படி இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைபிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர்களை தரங்களின் அடிப்படையில் உள்வாங்குதல் 2015 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கொழும்பு கல்வி வலயத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்ளீர்க்கப்படாதிருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 523 ஆக காணப்பட்டது.

(உ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை 2016

5.4.12 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்குனர்களிற்கு வெற் வரியினை தீர்ப்பதற்காக பணம் செலுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அந்த கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரிதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். இருப்பினும், கம்பஹ மாவட்ட பொது வைத்தியசாலையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த வெற் வரிகளிற்குரிய அவ்வாறான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.12 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

தனியார் மருத்துவ சேவைகள் கண்காணிப்பு ஆணைக்குழுவினால் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்காகவும் பதிவினை புதுப்பிப்பதற்காகவும் அறவிடப்பட்ட கட்டணங்களை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கையில் மருத்துவர் ஒருவரின் சம்பளம் என அத் தொகையிலிருந்து ரூபா 480,000 கழிக்கப்பட்டிருந்தது. மாகாண சபைக்கு சேரவேண்டிய வருமானத்திலிருந்து நேரடியான செலவினங்களைச் செய்வதற்கு மாகாண சபையின் அல்லது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. வருமான முகாமைத்துவம்

### 3.1 மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்

மீளாய்வாண்டிற்கும் முன்னைய 04 ஆண்டுகளிற்கும் உரிய மாகாண சபையின் பாதிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | மதிப்பிடப்பட்ட வருமானம் | | உள்ளபடியான வருமானம் | |
|---|---|---|---|---|
| | வரி வருமானம் | வரியல்லாத வருமானம் | வரி வருமானம் | வரியல்லாத வருமானம் |
| | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| 2011 | 19,952,560 | 1,855,488 | 21,669,946 | 2,847,473 |
| 2012 | 23,046,025 | 2,832,661 | 22,156,277 | 3,947,232 |
| 2013 | 27,302,025 | 2,815,230 | 22,262,325 | 3,259,241 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2014 | 28,284,973 | 2,992,291 | 28,112,653 | 2,979,182 |
| 2015 | 33,130,020 | 2,760,154 | 31,540,490 | 3,268,552 |

**3.2 வருமானத் தலைப்பு இல. 20-02-01-03 மாகாண காணிகள் ஆணையாளர்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொடம்கொட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 02 ஏக்கர் 01 ரூட் 10 பேர்ச் காணி 30 ஆண்டுகளிற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் நிலுவையாக காணப்பட்ட தொகை ரூபா 254,100 ஆகும்.

(ஆ) தெஹிவலை பிரதேச செயலகத்திற்கு உரித்தான நுகேகொட ஹைலெவல் வீதியில் அமைந்துள்ள காணியொன்று 2000 ஆம் ஆண்டில் 30 ஆண்டுகளிற்காக நீண்டகால குத்தகை உரித்தாவணத்தின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குறித்த குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை குத்தகை வழங்குனரால் 50 சதவீதத்திற்கு குறையாத தொகைக்கு குத்தகை மதிப்பிடப்பட்டு குத்தகை அறவிடப்படுதல் வேண்டும். அதற்கமைய 2005 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் குத்தகை திருத்தம் செய்யப்படாதிருந்ததுடன் 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்ட குத்தகை ரூபா 1,342,234 ஆகும்.

(இ) ஜாஎல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள 24 காணித் துண்டுகளை 2000 ஆம் ஆண்டு முதல் 23 நபர்களிற்கு நீண்டகால குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் அவர்களில் 17 பேர்களின் காணிகளில் அரசாங்க மதிப்பீட்டைப் பெற்று குத்தகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மதிப்பிடப்பட்டிருந்த எஞ்சிய 07 காணித் துண்டுகள் தொடர்பில் கணக்காய்வுத் திகதியான 2016 ஏப்ரல் மாதம் வரை ரூபா 3,483,000 குத்தகை நிலுவையாகக் காணப்பட்டது.

(ஈ) ஜாஎல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள ஜாஎல வத்த குடியிருப்பின் மூ.பி.கொ. 509 நிலஅளவை வரைபடத்திலுள்ள 09 ஆம் இலக்க துண்டிற்கான குத்தகையினை கணிப்பிடுகையில் வருடாந்த குத்தகைப் பெறுமதி ரூபா 7,000 குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 210,000 குத்தகைப் பணம் குறைத்து அறவிடப்படாதிருந்தது.

(உ) ஜாஎல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள ராகம தலகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள 4.209 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணி 1981 ஆம் ஆண்டில் குத்தகை உடன்படிக்கையின் மூலம் கொழும்பு வடக்கு மருத்துவ கல்லூரிக்கு 30 ஆண்டுகளிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த மருத்துவக் கல்லூரி களனி பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப்பட்ட பின்னர் அக் காணித்துண்டு களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. 30 ஆண்டு குத்தகை உடன்படிக்கைக் காலம் 2011 மே மாதத்தில் முடிவடைந்திருந்த போதிலும், மீண்டும் அதனை காலநீடிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் 4 ½ ஆண்டுகளிற்கான குத்தகை வருமானத்தை உரிய பிரகாரம் அறவிட்டுக்கொள்ள முடியாது போயிருந்தது.

(ஊ) ஜாஎல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள ''ராகம பிரீதிபுர சிறுவர் இல்லம்'' அமையப்பெற்றுள்ள அரசாங்க காணியிலிருந்து 156 பேர்ச் பகுதி நீண்டகால குத்தகை அடிப்படையில் 2008 ஆம் ஆண்டிலிருந்து கொழும்பு வடக்கு நகர நீர்ப்பாசன செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், இதற்குரிய குத்தகை வாடகை மதிப்பிடப்பட்டு குத்தகையினை அறிவிடுதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(எ) மஹர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 80 பேர்ச் காணியை தனியார் கம்பனியொன்றுக்கு 50 ஆண்டுகளிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டில் குறித்த கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்காமையால் உரிமை கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து அறவிடப்படக் கூடியதாகவிருந்த ஏறத்தாழ ரூபா 3,200,000 குத்தகை தொகை மாகாண சபைக்கு இழப்பாகியிருந்தது.

(ஏ) மஹர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 49.5 பேர்ச் காணியை தனியார் கம்பனியொன்றுக்கு 30 ஆண்டுகளிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டில் குறித்த கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்காமையால் உரிமை கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து அறவிடப்படக் கூடியதாகவிருந்த ஏறத்தாழ ரூபா 2,495,000 குத்தகை தொகை மாகாண சபைக்கு இழப்பாகியிருந்தது.

(ஐ) மஹர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 0.1091 ஹெக்டயார் காணியை சர்வதேச சிங்க கழகத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைகள் முடிவடைந்திருக்காமையால் உரிமை கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து அறவிடப்படக் கூடியதாகவிருந்த ஏறத்தாழ ரூபா 4,840,000 குத்தகை தொகை மாகாண சபைக்கு இழப்பாகியிருந்தது.

(ஒ) மஹர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 80 பேர்ச் காணியை தனியார் கம்பனியொன்றுக்கு 50 ஆண்டுகளிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டில் குறித்த கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கம்பனியினால் அந்த வர்த்தக நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தமையால் மாகாண சபைக்கு அறவிடப்படக் கூடியதாகவிருந்த குத்தகை தொகையினை அறவிட முடியாதிருந்தது.

(ஓ) மஹர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 0.2178 ஹெக்டயார் காணியை கூட்டுறவுச் சங்கமொன்றுக்கு வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2007 ஆம் ஆண்டில் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. சங்கத்தினால் குறித்த வைத்தியசாலை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தமையால் மாகாண சபைக்கு அறவிடப்படக் கூடியதாகவிருந்த குத்தகை தொகையினை அறவிட முடியாதிருந்தது.

(ஃ) அரசாங்க காணியினை வருடாந்த அனுமதிப்பத்திரத்தின் கீழ் குத்தகைக்கு வழங்கியிருந்தமையால் வத்தள பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 51 குத்தகைக்கு எடுத்தவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை ரூபா 435,049 ஆகக் காணப்பட்டது.

(க) மஹர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளிற்காக 03 நிறுவனங்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை ரூபா 1,314,500 தொகையாக காணப்பட்டது.

**3.3 வருமானத் தலைப்பு இல. 10-02-04-05 மாகாண இறைவரி ஆணையாளர்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 பெப்ரவரி 13 ஆந் திகதிய 973 ஆம் இலக்க அறிவித்தலின் படி வத்தள பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள 04 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய

ரூபா 750,000 தொகையான மதுவரி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய EC/G/R/L/2009 ஆம் இலக்க மதுவரி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பஹ பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 300,000 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 பெப்ரவரி 13 ஆந் திகதிய 0901/19 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருந்த 974 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலிற்கமைய 2015 ஆம் ஆண்டிற்குரிய திருத்திய அனுமதிப்பத்திரக் கட்டணத்தை 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி முடித்தல் வேண்டும். இருப்பினும், கெஸ்பேவ பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள 09 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,086,665 தொகையும் ஹோமாகம பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள 03 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 586,000 மதுவரி அனுமதிப்பத்திரக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கெஸ்பேவ பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள 02 நிறுவனங்கள் மற்றும் மொரட்டுவ பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் அமைந்துள்ள 02 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மதுவரி அனுமதிப்பத்திரக் கட்டணம் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 வருமானத் தலைப்பு இல. 10-03-07-01 மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

2006 இன் 21 ஆம் இலக்க தனியார் சிகிச்சை நிலையங்களை பதிவுசெய்தல் அதிகாரச்சட்டம் மற்றும் 2007 மார்ச் 22 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் காட்டப்பட்டுள்ளவாறு தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்தல் கட்டணத்திலிருந்து 50 சதவீதம் மாகாண சபையின் இந்த வருமானத் தலைப்பிற்கு கிடைத்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான அந்த வருமானத்தில் ரூபா 2,131,750 குறைவாக மாகாண சபைக்கு கிடைத்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 1,846,284,700 மிகையொன்று காணப்பட்டதுடன் இதற்கு எதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 47,191,903 ஆகும்.

| | 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|
| வருமானம் | ரூபா | ரூபா | ரூபா |
| வரி | 31,540,489,688 | 28,112,652,917 | 3,427,836,771 |
| வரியல்லாத | 3,268,551,781 | 2,979,181,771 | 289,370,010 |
| அரசாங்க மானியம் - மீண்டெழும் | 18,842,196,000 | 11,699,313,000 | 7,142,883,000 |
| மூலதனம் | 2,912,561,610 | 1,607,184,120 | 1,305,377,490 |
| மொத்தம் | 56,563,799,079 | 44,398,331,808 | 12,165,467,271 |

| செலவினம் | | | |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனங்கள் | 32,301,076,443 | 25,119,406,935 | 7,181,669,508 |
| ஏனைய மீண்டெழுபவை | 17,132,714,424 | 13,462,640,733 | 3,670,073,691 |
| மூலதனம் (மாகாண முதலீடுகள்) | 5,283,723,512 | 5,863,476,043 | (579,752,531) |
| மொத்தம் | 54,717,514,379 | 44,445,523,711 | 10,271,990,668 |
| மேலதிகம்/பற்றாக்குறை | 1,846,284,700 | (47,191,903) | 1,893,476,603 |

## 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகை ரூபா 1,893,476,603 ஆல் அதிகரித்திருந்தமைக்கு அரசாங்க மானியம் ரூபா 8,448,260,490 ஆல் அதிகரித்திருந்தமையும் மாகாண முதலீடுகள் ரூபா 579,752,531 ஆல் குறைவடைந்திருந்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

(ஆ) மாகாண சபையின் மீளாய்வாண்டுக்குரிய மொத்த வருமானமாகிய ரூபா 56,563,799,079 இல் 61 சதவீதமானவை அல்லது ரூபா 34,809,041,469 மாகாண சபையினால் உழைக்கப்பட்ட வருமானமாக காணப்பட்டதுடன் 39 சதவீதமானவை அல்லது ரூபா 21,754,757,610 அரசாங்க மானியத்தை உள்ளடக்கியிருந்தது.

(இ) மாகாண சபையின் மீளாய்வாண்டுக்குரிய மொத்த செலவினமான ரூபா 54,717,514,379 இல் 90 சதவீதமானவை அல்லது ரூபா 49,433,790,867 மீண்டெழும் செலவினமாக காணப்பட்டதுடன் 10 சதவீதமானவை அல்லது ரூபா 5,283,723,512 மூலதனச் செலவினத்தை உள்ளடக்கியிருந்தது.

(ஈ) அரசாங்க மானியத்தின் கீழான மீண்டெழும் மானியம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 38 சதவீதத்தால் அல்லது ரூபா 7,142,883,000 இனாலும் மூலதன மானியம் 49 சதவீதத்தால் அல்லது ரூபா 1,305,377,490 இனாலும் அதிகரித்திருந்தன.

(உ) செலவினத்தின் கீழான மீண்டெழும் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22 சதவீதத்தால் அல்லது ரூபா 10,851,743,199 இனால் அதிகரித்திருந்ததுடன் மூலதன செலவினம் (மாகாண முதலீடுகள்) 11 சதவீதத்தால் அல்லது ரூபா 579,752,531 இனால் குறைவடைந்திருந்தது.

## 4.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் இறுதியளவில் இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 749,465,748 மீதியும் குறுங்கால முதலீடுகளின் கீழ் ரூபா 7,250,000,000 மீதியும் காணப்பட்டது.

## 5. அதிகாரக் கணக்குகள்

### 5.1 பொருளாதார மேம்படுத்தல் பணியகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்/பணிப்பாளர் பதிவிக்கு ஆட்சேர்த்தல் நடைமுறையின் படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து குறித்த துறையில் ஆரம்ப பட்டத்துடன் முதுமானி / முதுகலைமானி பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் துணைநிலை உறுப்புரிமையை பெற்றிருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பதவிக்காக 2011 யூலை 01 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் ஆடசேர்ப்புச் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர் 2014 மே 02 ஆந் திகதி முதல் அப்பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவரால் பதவிக்குத் தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) பொருளாதார மேம்படுத்தல் பணியகத்தினால் திட்டமிடப்பட்டிருந்த மேல் மாகாண பொருளாதார மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் 2014 ஒக்தோபர் 07 ஆந் திகதி முதல் 20 ஆந் திகதி வரை ரூபா 7,347,866 செலவில் அவுஸ்திரேலியாவில் நடாத்தப்பட்டிருந்தது. 07 அங்கத்தவர்கள் கலந்துகொண்டிருந்த இப் பயணத்திற்காக கல்வி அமைச்சின் சட்டப் பிரிவின் பெண் உத்தியோகத்தரும் அப்போதைய பிரதம அமைச்சிரின் தனிப்பட்ட செயலாளரும் பங்குபற்றியிருந்ததுடன் அவர்கள் இருவருக்காகவும் ரூபா 1,800,000 இற்கு கிட்டிய தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த பயணத்தினால் மாகாண அபிவிருத்திக்குக் கிடைத்த பங்களிப்பு மற்றும் அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரையும் கல்வி அமைச்சின் சட்டப் பிரிவின் பெண் உத்தியோகத்தரையும் பங்குபற்றச் செய்வதற்கான தேவை தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மேல் மாகாணத்திலுள்ள மத ஸ்தளங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற அறநெறி பாடசாலைகளிற்கான சுகாதார மற்றும் பொது வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் II ஆம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 261,114,300 தொகை பிரதம அமைச்சரின் செலவுத் தலைப்பின் கீழ் பணியகத்திற்குக் கிடைத்திருந்தது. செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களிற்கு முரணாக பிரச்சார மற்றும் உபசார நடவடிக்கைகளிற்காக ரூபா 16,843,574 செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 5.2 கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் ''ஆள்சார் திறன்கள் அபிவிருத்தி'' செயற்திட்டம் இயங்கிச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் ஒரு பகுதியில் அனுமதியற்ற ஆரம்ப பாடசாலையொன்று நடாத்திவரப்படுகின்றது.

(ஆ) அதிகாரசபையின் கீழ் செயற்படுகின்ற பிலியந்தல தெல்தர மரத் தளபாடங்களை மெருகூட்டும் செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாணங்கள் மற்றும் உபகரணங்களிற்காக ஏறத்தாழ ரூபா 2,578,203 செலவிடப்பட்டிருந்த போதிலும், குறைந்த வருமானம் கொண்ட மரத் தளபாட தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் மரத்திலான உற்பத்திகளின் மெருகூட்டலை தயாரிப்பதற்கான மத்திய நிலையமாக இதனை பயன்படுத்துதல் என்ற இச் செயற்திட்டத்தின் நோக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேறியிருக்கவில்லை.

## 5.3 சுற்றுலா சபை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா சபையினால் நீர்கொழும்பு ஏத்துகால கடற்கரை பூங்காவினை நிர்மாணித்தல் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 165,921,430 செலவிடப்பட்டிருந்தது. இப் பூங்கா மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயனுள்ள பணிகளிற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாப்பரசர் அவர்களின் இலங்கைக்கான வருகையின் நிமித்தம் 2015 ஆம் ஆண்டில் சுற்றுலா சபையினால் 200 ரீ சேட்டுகள் ரூபா 170,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவை இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பகிர்ந்தளிக்கப்பட்ட முறை குறித்த தகவல்கள் எதுவும் அல்லது பெறப்பட்ட அங்கீகாரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் இயங்குகின்ற கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையினால் நடாத்தப்படுகின்ற நீளவர்ணக் கொடி தினத்தை முன்னிட்டு அந்த அதிகாரசபையின் கோரிக்கைக்கு அமைய சுற்றுலா சபையினால் 1,000 தொப்பிகள் ரூபா 240,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக பெறப்பட்ட அங்கீகாரம் அல்லது தேவைப்பாடு தொடர்பிலான எவ்விதத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 அரங்காட்டல் விடுதிகள் கட்டுப்பாட்டு அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டிருந்த நடன ஆற்றல் கொண்ட பயிலுனர்களின் திறன்களை மேம்படுத்தும் ஆறு மாத பயிற்சிப் பாடநெறிக்காக 75 மாணவர்களை பயிற்றுவிப்பதற்காக ரூபா 576,400 ஒதுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இச் செயற்திட்டத்தினை அங்கீகரித்தல் 2015 யூலை 20 ஆந் திகதி வரை தாமதிக்கப்பட்டிருந்தமையால் செயற்திட்டத்தினை ஆரம்பிக்க முடியாது போயிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் வைப்புக் கணக்கில் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட தீர்க்கப்படாதிருந்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,117,100 ஆகும்.

(இ) அதிகாரசபையின் வளவில் அமைந்துள்ள 02 நீர் தடாகங்களை சுத்திகரிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 545,000 பெறுமதியான உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், இந்த உபகரணங்கள் செயலிழந்து காணப்பட்டமையால் 2012 ஆம் ஆண்டிலிருந்து தடாகங்களை சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 கழிவு முகாமைத்துவ அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு பெறுமதி சேர் வரியினை (VAT) செலுத்துகையில் ரூபா 356,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் குறிக்கோள்களுடன் சம்பந்தப்படாத பணிகளிற்காக 2014 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 291,350 செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக பெறப்பட்டிருந்த அங்கீகாரமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையினால் உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் சட்டரீதியாக கையளிக்கப்பட்டிருக்காமை காரணமாக அந்த வாகனங்களை காப்புறுதி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து ரூபா 1,364,806 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) அதிகாரசபையினால் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த கரதியான கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக கையேற்கப்பட்டிருந்த காணிக்கு இழப்பீட்டினை செலுத்துதல் தாமதிக்கப்பட்டிருந்தமை காரணமாக 2014 ஆம் ஆண்டில் ரூபா 796,493 வட்டியினை செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் கையேற்கப்பட்டிருந்த இக் காணியில் குறித்த செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) கடுவல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கடுவல கொரதொட மைக்வத்த என்ற காணி ‘‘கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும்’’ செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு கையேற்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் மாத்திரம் இக் காணிக்கான நீர், மின்சார மற்றும் பாதுகாப்புச் செலவினமாக ரூபா 1,371,475 செலவிடப்பட்டிருந்தது.

**5.6 மாகாண வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க நிறுவனங்களிலுள்ள வாகனங்களை திருத்தியமைக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்களாக 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்காத ரூபா 2,135,454 தொகையும் 03 முதல் 05 ஆண்டுகளிற்கு உட்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்காத ரூபா 2,743,150 தொகையும் இருக்கக் காணப்பட்டன. அவ்வாறே, 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்பட்டிருக்காத இயந்திர வாடகை கட்டணம் ரூபா 31,954,883 ஆகும்.

(ஆ) அதிகாரசபையினால் 2011 ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 14 வாகனங்களிற்காக 2011 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2012 இன் 12 ஆம் இலக்க நிதி அதிகாரசட்டங்களின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய இரட்டை நோக்க அரைச் சொகுசு வரியான ரூபா 414,000 செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண நிதி ஒழுங்குவிதி 261 இன் பிரகாரம் வழங்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதிகள் குறித்த பணி நிறைவேற்றப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 20 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 10,352,345 கட்டுநிதிகள் கணக்காய்வு சந்தர்ப்பமான 2015 ஆகஸ்ட் மாதம் வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அதிகாரசபையின் குறிக்கோள்களுடன் சம்பந்தப்படாத பணிகளிற்காக 06 சந்தர்ப்பங்களில் ரூபா 3,729,638 அதிகாரசபை நிதியத்திலிருந்து முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாடகை அடிப்படையில் பெற்றப்பட்ட வாகனங்களிற்காக செலுத்தப்படத்தக்க வரி நீங்கலான அதிகூடிய மாதந்த வாடகை ரூபா 40,000 ஆகும். அவ்வாறிருப்பினும்,

அதிகாரசபையினால் மாதாந்த வாடகை ரூபா 50,000 முதல் ரூபா 100,000 வரையில் பெற்றப்பட்ட 18 வாகனங்களிற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,210,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) அதிகாரசபைக்குரிய விபத்துக்குள்ளாகியிருந்த WP/PA – 1694 ஆம் இலக்க வாகனம் முறைப்படி கூறுவிலைகள் கோரப்படாது ரூபா 572,625 மதிப்பீடொன்றின் மீது திருத்துவதற்காக 2013 யூலை 03 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு சந்தர்ப்பமான 2016 யூலை மாதம் வரையிலும் இந்த வாகனம் திருத்தப்பட்டு அதிகாரசபைக்கு கையளிக்கப்படாதிருந்த போதிலும், விபத்திற்காக காப்புறுதி இழப்பீடாகக் கிடைத்திருந்த ரூபா 331,290 தொகை 2013 யூன் மாதத்தில் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஊ) அதிகாரசபையினால் ரூபா 158,030,625 செலவில் 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கொங்ரீட் விசுரும் இரண்டு இயந்திரங்கள் எந்தவொரு வீதி நிர்மாணத்திற்காவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2012 ஆம் ஆண்டில் ரூபா 6,202,329 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ''கியூபர்'' (Cuber) இயந்திரம் 2014 இயந்திரம் 2014 நவம்பர் மாதம் வரையிலும் பொருத்தப்படாது திவுலபிடிய கொங்ரீட் பிரிவில் உள்ள களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த இயந்திரத்தை காப்புறுதி செய்வதற்காக அதிகாரசபையினால் வருடந்தோரும் ரூபா 750,915 செலவிடப்பட்டிருந்தது.

(எ) அதிகாரசபையினால் இடமாற்றக் கொள்கை உரிய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படாதிருந்ததுடன், 05 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை 133 உத்தியோகத்தர்களும், 11 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் வரை 52 உத்தியோகத்தர்களும், 16 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் வரை 16 உத்தியோகத்தர்களும், 20 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக மூன்று உத்தியோகத்தர்களும் ஒரே சேவை நிலையத்திலும் ஒரே பணியிலும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

## 5.7 தகவல் தொழில்நுட்ப வளங்கள் அபிவிருத்தி நிறுவனம்

2010 ஆகஸ்ட் முதல் 2014 யூலை வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உதவு தொகையினை செலுத்தியிருக்காமை காரணமாக நிலுவை உதவு தொகையாக ரூபா 654,617 உம் மிகை அறவீடாக ரூபா 277,472 உம் நிறுவனத்தினால் 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தன. நிலுவை உதவு தொகையில் உள்ளடங்கியிருந்த ரூபா 261,846 ஊழியர்களின் பங்களிப்புத் தொகையினை ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

## 5.8 வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் 2012 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வுக்கு அமைய கடவத பேருந்து தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக் காணி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபையினால் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் எல்லைகளை மீறி அதிகாரசபையின் மூன்று உத்தியோகத்தர்களினால் 2014 ஆம் ஆண்டில் 2,249 எரிபொருள் லீற்றர் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள 04 பேருந்து நிலையங்களிலுள்ள 44 கடை அறைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 6,384,672 நிலுவை வாடகை கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 செயலாற்றல்

#### 6.1.1 அரசாங்க மானியம்

மீளாய்வாண்டு தொடர்பில் மாகாண சபை அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக கிடைத்த அரசாங்க மானியம் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறைப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |
| (i) | மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி மானியம் | 1,338.26 | 1,195.95 | 142.31 |
| (ii) | மாகாண அபிவிருத்தி மானியம் | 1,637.77 | 1,399.98 | 237.79 |
| (iii) | கருதுகோள் அடிப்படை மானியம் | 499.38 | 458.40 | 40.98 |
| (iv) | விசேட துறைகள் அபிவிருத்தி மானியம் - சுகாதாரம் | 375.88 | 332.51 | 43.37 |
| (v) | விசேட துறைகள் அபிவிருத்தி மானியம் - கல்வி | 286.05 | 234.02 | 52.03 |
| | மொத்தம் | 4,137.34 | 3,620.86 | 516.48 |

#### 6.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் தொடர்ச்சியான வேலைகளின் கீழ் ரூபா 4,323.60 மில்லியன் பெறுமதியான 7968 வேலைத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அவற்றின் முன்னேற்றங்கள் பின்வருமாறாகும்.

| | | புதிய வேலைகள் | தொடர்ச்சியான வேலைகள் | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | | | | | ரூபா மில்லியன் |
| (அ) | முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டவை | 7,129 | 195 | 7,324 | 4,010.49 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 50% இனை விடக் குறைவாக பூர்த்தி செய்யப்பட்டவை | 130 | - | 130 | 79.48 |
| (இ) | 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்டவை | 36 | - | 36 | 64.83 |
| (ஈ) | ஆரம்பிக்கப்படாதவை | 434 | 16 | 450 | 161.40 |
| (உ) | சர்ச்சைக்குரிய / சிக்கலான நிலைமைக்கு உட்பட்டிருந்தவை | 28 | - | 28 | 7.40 |
| | | ---------- | ------------ | --------- | ----------- |
| | | 7,757 | 211 | 7,968 | 4,323.60 |
| | | ===== | ====== | ===== | ======= |

## 6.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 செப்தெம்பர் 09 ஆந் திகதி அன்று வெளிநாட்டு விடுமுறை காலம் முடிவடைந்திருந்த காணி, கல்வி, உள்ளூராட்சி, மனித சக்தி, வேலை வாய்ப்புக்கள் மற்றும் தகவல் அமைச்சில் பணியாற்றிய பெண் உத்தியோகத்தர் மீளாய்வாண்டின் இறுதி வரை சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை. 2016 மார்ச் 09 ஆந் திகதிய அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் படி தாபனவிதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 981,800 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 மே மாதம் வரை அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்வி, கலாச்சார மற்றும் கலை விவகாரம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழில்நுட்ப அமைச்சின் ரூபா 1,500,000 நிதி ஏற்பாட்டின் கீழ் 75 கலைஞர்களை பயிற்றுவிப்பதற்காக நாடக செயலமர்வொன்று திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் அதற்காக 38 கலைஞர்கள் மாத்திரமே பங்குபற்றியிருந்துடன் நாடக செயலமர்வில் பங்குபற்றியிருக்காத 06 நபர்களிற்கு ரூபா 150,000 பணப் பரிசு வழங்கப்பட்டிருந்தது. மேலும், மேல் மாகாண 2015 விளையாட்டு விழாவில் வெற்றிபெற்ற 1,128 விளையாட்டு வீரர்களிற்கு பணப் பரிசுகளை வழங்குவதற்காக 2015 நவம்பர் மாதத்தில் அமைச்சினால் ரூபா 810,250 செலவிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2016 பெப்ரவரி மாத கணக்காய்வுப் பரிசோதனை சந்தர்ப்பம் வரை 487 விளையாட்டு வீரர்களிற்கு ரூபா 398,750 பணப் பரிசு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(இ) கம்பஹ மாவட்டத்தின் களனி மற்றும் மினுவான்கொட வலயக் கல்வி அலுவலகங்களிற்குரிய மாகாண சபை பாடசாலைகள், கல்வி பீடங்கள், கணனி நிலையங்கள், அபிவிருத்தி நிலையங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள் உள்ளிட்ட 283 நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டிற்குரிய ஆய்வு நடவடிக்கைகள் 87 நிறுவனங்களால் மாத்திரமே பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

(ஈ) மூன்று நிறுவனங்களால் 2014 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 19 பொருள் வகைகளிற்குரிய ரூபா 525,225 பெறுமதியுடைய 647 அலகுகள் 2016 மார்ச் மாதம் வரை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) களனி வலயக் கல்வி அலுவலகத்தில் நிலுவைச் சம்பளங்களை கணிப்பிட வேண்டியிருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 3,856 ஆன போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை 2,664 ஆசரியர்களின் நிலுவைச் சம்பளங்கள் கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கல்வி, கலாச்சார மற்றும் கலை விவகாரம், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழில்நுட்ப அமைச்சர் 2015 யூன் மாதத்தில் பங்குபற்றியிருந்த வெளிநாட்டு பயணத்திற்கான இணைந்த படியாக ரூபா 228,986 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சுச் செயலாளரின் 2015 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய கடிதத்தின் படி இத் தொகை மீள அறவிடப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் மாதம் வரை அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையம் 25 நபர்களிற்கான வதிவிட வசதியைக் கொண்டிருந்த போதிலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் எந்தவொரு வதிவிட செயலமர்வும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தியும் வர்த்தகமும், வீடமைப்பும் நிர்மாணங்களும், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சிற்கு வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்காக மாகாண திறைசேரியிலிருந்து 2011 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த ரூபா 1,009,233 தொகை வைப்புக்களின் கீழ் காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாகனக் கொள்வனவு இடம்பெற்றிருக்கவில்லை.

## 6.3 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஒக்தோபர் மாதத்தில் களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்த 2015 ஒக்தோபர் மாதத்தில் காலாவதியாகுவதற்குள்ள 1000 Promathasing மாத்திரை இருப்பு மீரிகம சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் அலுவலக களஞ்சியத்தில் காணப்பட்ட போதிலும், மீண்டும் 2015 சனவரி 30 ஆந் திகதி 500 மாத்திரைகள் பெறப்பட்டிருந்தன. மேலும், 2015 மார்ச் மாதத்தில் காலாவதியாகிய 259 DPT ஊசி மருந்துகள் களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஆ) மீரிகம ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்கையில் மாத்திரம் தேவைப்படுகின்ற 16 ஒட்சிசன் சிலிண்டர்கள் காணப்பட்ட போதிலும், இந்த வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுவதில்லையாகையால் அந்த உபகரணங்கள் நிண்டகாலமாக பயன்பாடற்று வைக்கப்பட்டிருந்தன.

(இ) கம்பஹ மாவட்ட பொது வைத்தியசாலையினால் மாரடைப்பு நோயாளர்களிற்குத் தேவையான 12,000 Enoxaparin மருந்து இருப்பு 2015 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், முதல் 03 மாதங்களிற்காவும் 1,450 மருந்து இருப்பு மாத்திரமே கிடைத்திருந்தது. வைத்தியசாலையின் தேவைக்கு அந்த மருந்து அளவு போதாதிருந்தமை காரணமாக ஒன்று ரூபா 1,656.50 வீதம் 317 மருந்தினை வெளியிலிருந்து கொள்வனவு செய்வதற்காக ரூபா 525,110 செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே வைத்தியசாலையினால் 2014 ஆம் ஆண்டில் டெங்கு நோயாளர்களிற்கு வழங்குவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,211,016 பெறுமதியுடைய Dextran 40% என்ற 695 மருந்து போத்தல்கள் 2014 பெப்ரவரி மாதம் முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) களுத்துறை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 100 நாள் மாகாண குறித்துரைத்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 13,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,487,735 நோக்கங்களிற்கு முரணான செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்டிருந்தது. அத்துடன், மேல் மாகாண அபிவிருத்தி மானியத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 7,750,000 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 857,029 செயற்திட்ட நோக்கங்களிற்கு முரணான செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) உலக வங்கியின் கடன் உதவியின் கீழ் பானந்துறை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 102,662,558 நிதி ஏற்பாட்டிலிருந்து 05 சந்தர்ப்பங்களில் ரூபா 3,933,044 உரிய நோக்கங்களிற்கு முரணான செயற்பாடுகளிற்காக செலவிடப்பட்டிருந்தது.

(இ) ஹோமாகம மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த சாரதியொருவர் 2015 யூலை மாதம் முதல் விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, சிறு நீர்ப்பாசன, கைத்தொழில், சுற்றாடல் விவகார, கலாச்சார மற்றும் கலை விவகார அமைச்சரின் தனிப்பட்ட பதவியணிக்கு இணைப்புச் செய்யப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படியாக ரூபா 408,940 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க அச்சகமும் மாகாண சபைக்குச் சொந்தமாக அச்சகமொன்றும் இருக்கையில், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தினால் ரூபா 3,645,000 செலவில் 1,500,000 வாகன வருமான அனுமதிப்பத்திரங்கள் தனியார் நிறுவனமொன்றில் அச்சிடப்பட்டிருந்தன.

(உ) வருடாந்தம் கேள்விகள் கோரப்படாது 2007 யூன் மாதம் முதல் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் உணவகம் ரூபா 50,000 மாதாந்த வாடகைக்கு ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, உணவகத்தின் நீர் வழங்கலிற்காகவும் வைத்தியசாலையின் நீர் பட்டியல்களுடன் சேர்த்து கொடுப்பனவு இடம்பெறுகின்றமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

**6.5 வெளிப்படையான மோசடிகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொடம்கொட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தொடம்கொட வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மாகாண சபைக்குச் சொந்தமான 11 ஏக்கர் 26 பேர்சஸ் கல்லனயாலந்த என்ற காணியின் குத்தகையாளரால் வர்த்தக உரித்துறுதி தயாரிக்கப்பட்டு அக் காணி 20 நபர்களிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(ஆ) தனியார் மருத்துவ சேவைகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் தனியார் மருத்துவ சேவைகள் கட்டணமான மாகாண சபைக்குரிய வருமானத்திற்காக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,692,800 பெறுமதியான 04 காசோலைகள் மாகாண சபை வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் இக் காசோலைகள் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டது என்ற எந்தவொரு தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.6 நிதியங்களின் குறைப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீர்கொழும்பு கல்வி வலயத்தில் தர உள்ளீட்டு நிதிகளை பயன்படுத்தாத 36 பாடசாலைகள் காணப்பட்டதுடன் அவற்றில் 14 பாடசாலைகளிற்காக கிடைத்திருந்த ரூபா 3,232,138 தொகையில் மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாத கணக்காய்வு சந்தர்ப்பம் வரை ரூபா 28,778 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கம்பஹ மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான தொம்பே வைத்தியசாலையில் புதிய ஆய்வுகூடமொன்றை நிர்மாணிப்பதற்காக தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 760,998 கிடைத்திருந்த போதிலும், குறித்த செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.7 விளைவற்ற/ குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீன்பிடி, வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தியும் வர்த்தகமும், வீடமைப்பும் நிர்மாணங்களும், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் 2010 முதல் 2014 வரையான காலத்தில் ரூபா 29,918,786 செலவிடப்பட்டிருந்த பிடிபன நீரியல் தாவர நிலையம் தற்போது செயற்படற்ற நிலையில் காணப்படுகின்றமை 2015 ஒக்தோபர் 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. அங்குள்ள ரூபா 6,003,961 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 68 மீன் இனவிருத்தி தாங்கிகளும் ரூபா 1,324,291 செலவில் பெறப்பட்டிருந்த ஆய்வுகூட உபகரணங்களும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை காரணமாக அழிவுற்று வருகின்றமையினை காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறே, இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ள காணியில் ஏறத்தாழ 35 பேர்சஸ் பகுதியில் அனுமதியற்ற கருவாட்டு கொட்டில் நடாத்திவரப்படுகின்றமையும் அதன் கழிவுகள் அருகாமையிலுள்ள களப்பிற்கு விடுவிக்கப்படுகின்றமையால் நீர் மாசுறுகின்றமை காரணமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த மீன் இனவிருத்தி தாங்கிகளிற்குத் தேவையான சுத்தமான நீரை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) கம்பஹ மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கண்காணிக்கப்பட்டு வருகின்ற 96 உத்தியோகபூர்வ இல்லங்களில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 60 உத்தியோகபூர்வ இல்லங்கள் மாத்திரமே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

### 6.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பத்தரமுல்லை பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடமொன்று 2015 யூலை மாதத்திலிருந்து குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன், அதில் கழிவு முகாமைத்துவ அதிகாரசபைக்கு ஒதுக்கிய பகுதிக்காக அத்தினத்திலிருந்து மாதாந்தம் ரூபா 242,000 வாடகை பிரதம செயலாளரின் செலவினத் தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2016 ஏப்ரல் மாத கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை அதிகாரசபை இக்கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது.

## 6.9 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பஹ மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வாகனங்களிற்கு 1995 முதல் 2002 வரையான காலத்தில் ஏற்பட்டிருந்த விபத்துக்களிற்கான காப்புறுதி இழப்பீட்டுக் கோரிக்கைகள் 2012 ஆம் ஆண்டு வரை தாமதிக்கப்பட்டிருந்தமை காரணமாக காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது. இதன் காரணமாக ரூபா 188,888 ஆன நட்டம் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு இருந்ததுடன், அதில் ரூபா 160,328 மீளாய்வாண்டின் இறுதியளவில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 மார்ச் 07 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்த நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சொந்தமான HN – 7484 ஆம் இலக்க நோயாளர் காவும் வண்டி தொடர்பில் காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்களை உரிய வேளையில் சமர்ப்பித்திருக்காமை காரணமாக ரூபா 217,275 நட்டத்தினை புத்தகங்களிலிருந்து பதிவழிக்க வேண்டியேற்பட்டிருந்தது.

## 6.10 தாமதிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

தொம்பே பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிலைட் தோட்ட கல்கெடிய என்ற காணியில் மண்ணை வெட்டி அதன் பின்னர் அக் காணியில் வீடுகளை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான நிலைக்குக் கொண்டுவருவதற்கு தனியார் கம்பனியொன்றினால் 2006 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த காணி வீடுகளை நிர்மாணிப்பதற்குப் பொருத்தமான நிலைக்குக் கொண்டுவரப்படாதிருந்ததுடன், வெட்டப்பட்ட மண்ணிற்காக ரூபா 584,000 அரசாங்க பங்களிப்பு செலுத்தப்பட்டிருந்தது.

## 6.11 பதவியணி முகாமைத்துவம்

### 6.11.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்களும் அவதானிப்புக்களும் பின்வருமாறாகும்.

| | அங்கீகரிக்கப் பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிட ஊழியர் எண்ணிக்கை | மேலதிக ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தர | அமைய/அமைய/ ஒப்பந்த | | |
| சிரேஷ்ட | 826 | 745 | 22 | 81 | - |
| மூன்றாம் | 435 | 312 | - | 123 | - |
| இரண்டாம் | 4,440 | 3,664 | 135 | 776 | - |
| ஆரம்ப | 3,823 | 3,914 | 05 | - | 91 |
| ஒப்பந்த | 13 | - | - | 13 | - |
| தற்காலிக/அமைய/சமயாசமய | 14 | - | 09 | 05 | - |
| மொத்தம் | 9,551 | 8,635 | 171 | 998 | 91 |

(அ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 41 ஆனதுடன் 2016 சனவரி மாதமளவில் பதவியணியினர் எண்ணிக்கை 36 ஆக காணப்பட்டது. அவர்களில் இருவர் ஏனைய அலுவலகங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், ஒரு உத்தியோகத்தர் வேறொரு நிறுவனத்திலிருந்து இவ் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்.

(ஆ) நீர்ப்பாசன திணைக்களத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் பதவிகளின் எண்ணிக்கை 04 காணப்பட்டதுடன் அவற்றில் 03 வெற்றிடமாகக் காணப்பட்டன. அவற்றில் களுத்துறை மற்றும் கம்பஹ மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் அலுவலகங்களிலுள்ள பொறியியலாளர் பதவிகளில் பதிற் கடமையாற்றுவதற்காக விசேட தரத்திலுள்ள 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) நீர்ப்பாசன திணைக்களத்தின் நிரந்தர பதவியணிக்குரிய இலங்கை தொழில்நுட்ப சேவையின் (விசேட தரம்) மூன்று உத்தியோகத்தர்கள் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலிருந்து ஏனைய நிறுவனங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் அந்த மூன்று உத்தியோகத்தர்களிற்கான சம்பளமாக ரூபா 2,073,744 செலுத்தப்பட்டிருந்தது.

### 6.11.2 பாடசாலைப் பதவியணியினர்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்களும் அவதானிப்புக்களும் பின்வருமாறாகும்.

| | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **மிகைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| அதிபர்கள் | 1,732 | 1,280 | 452 | - |
| ஆசிரியர்கள் | 34,374 | 34,652 | - | 278 |
| சிற்றூழியர்கள் மற்றும் உதவியாளர்கள் | 1,586 | 1,215 | 371 | - |
| மொத்தம் | 37,692 | 37,147 | 823 | 278 |

(அ) கொழும்பு கல்வி வலயத்திலுள்ள மகளிர் கல்லூரியொன்றின் ஆசிரியை ஒருவரின் வெளிநாட்டு விடுமுறை காலம் 2013 யூலை 10 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீண்டும் சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை. இந்த ஆசிரியை பயின்றிருந்த பயிற்சி பாடநெறிக்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய செலவினம் ரூபா 500,000 ஆக இருந்தது.

(ஆ) கொழும்பு கல்வி வலயத்திலுள்ள ஆனந்தா கல்லூரியின் ஆசிரியை ஒருவரின் வெளிநாட்டு விடுமுறை காலம் 2014 நவம்பர் 25 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீண்டும் சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

(இ) களனி, மினுவன்கொட, நீர்கொழும்பு மற்றும் கம்பஹ வலயக் கல்வி அலுவலகங்களில் சேவையில் நிரந்தரமாக்குவதற்கான காலத்தினை பூரணப்படுத்தியிருந்த 173 ஆசிரியர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பெறுபேறுகள் உறுதிப்படுத்தப்படாமை, அதிபரின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை, கடமையினை பொறுப்பேற்பதற்கான லொக் பதிவு கிடைத்திருக்காமை போன்ற காரணங்கள் அதற்குத் தாக்கமளித்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஈ) கம்பஹ கல்வி வலயத்திலுள்ள 131 பாடசாலைகளில் 19 பாடங்களிற்காக 146 சிங்கள மொழிமூல வெற்றிடங்களும் 23 பிரதி அதிபர் பதவிகள் மற்றும் 42 உதவி அதிபர் பதவிகளில் வெற்றிடங்களும் காணப்பட்டன.

### 6.11.3 சுகாதார பதவியணியினர்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்களும் அவதானிப்புக்களும் பின்வருமாறாகும்.

| | அங்கீகரிக்கப் பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் | | வெற்றிட ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | நிரந்தர | அமைய/சமயாசமய/ ஒப்பந்த/தற்காலிக | |
| மருத்துவர்கள் | 2,049 | 1,973 | - | 76 |
| தாதிகள் | 3,268 | 3,002 | 11 | 266 |
| உதவி பதவியணியினர் | 4,288 | 3,063 | 49 | 1,225 |
| சிற்றூழியர்கள் | 3,515 | 3,375 | - | 140 |
| மொத்தம் | 13,120 | 11,413 | 60 | 1,707 |

பாணந்துறை வைத்தியசாலையின் பதவியணியிலுள்ள 28 பதவிகளில் 82 வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தமையும் 2006 ஆம் ஆண்டின் பின்னர் வைத்தியசாலையின் பதவியணி திருத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 6.11.4 உள்ளூராட்சி நிறுவனங்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்களும் அவதானிப்புக்களும் பின்வருமாறாகும்.

| | அங்கீகரிக்கப் பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் நிரந்தர | அமைய/நாட்கூலி/ ஒப்பந்த /தற்காலிக | வெற்றிட ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 535 | 375 | 38 | 160 |
| மூன்றாம் | 345 | 216 | - | 129 |
| இரண்டாம் | 6,134 | 4,573 | 52 | 1,561 |
| ஆரம்ப | 14,446 | 12,636 | 531 | 1,810 |
| ஒப்பந்த | 15 | - | 09 | 06 |
| தற்காலிக/அமைய/சமயாசமய | 20 | - | 14 | 06 |
| மொத்தம் | 21,495 | 17,800 | 644 | 3,672 |

### 6.11.5 நியதிச்சட்டங்களின் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்களும் அவதானிப்புக்களும் பின்வருமாறாகும்.

| | அங்கீகரிக்கப் பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் நிரந்தர | அமைய/நாட்கூலி/ ஒப்பந்த /தற்காலிக | வெற்றிட ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட | 77 | 48 | 08 | 29 |
| மூன்றாம் | 99 | 78 | 05 | 21 |
| இரண்டாம் | 495 | 439 | 02 | 56 |
| ஆரம்ப | 643 | 613 | - | 30 |
| மொத்தம் | 1,314 | 1,178 | 15 | 136 |

### 6.12 வாகனப் பயன்பாடு

மீன்பிடி, வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தியும் வர்த்தகமும், வீடமைப்பும் நிர்மாணங்களும், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டிருந்த KC–8010 ஆம் இலக்க ஜீப் வாகனம் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதி செயற்பாடற்ற நிலையில் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான இயந்திர பொறியியலாளரின் அறிக்கையின் படி ரேடியேடரில் நீர் ஒழுக்கு காணப்படுகையில் பயணித்தமை காரணமாக என்ஜின் செயலிழந்ததாகக் குறிப்பிடப்பட்டு

பயன்படுத்திய என்ஜின் ஒன்றைப் பொருத்துவதற்காக ரூபா 878,000 மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அமைச்சினால் அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 812,291 செலவிடப்பட்டு வாகனம் திருத்தப்பட்டிருந்தது. இதற்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் தொடர்பான விசாரணை, அகற்றப்பட்ட என்ஜின் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் புதிய என்ஜின் பொருத்தப்பட்டமை காரணமாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் தொடர்பான எவ்வித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.13 வங்கிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுறவு ஒடுக்குதல் நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் தேறாதிருந்த ரூபா 10,000 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 06 நிறுவனங்களின் 06 வங்கிக் கணக்குகள் தொடர்பில் கொடுப்பனவுகளிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாது 06 மாதங்களைக் கடந்திருந்த ரூபா 408,479 கூட்டுத்தொகையான 61 காசோலைகள் காணப்பட்டன.

(இ) 08 நிறுவனங்களின் 08 வங்கி நடைமுறைக் கணக்குகளிற்குரிய இனங்காணப்படாத வரவு வைத்தல்கள் ரூபா 2,164,515 ஆகவும் 06 நிறுவனங்களின் 06 வங்கி நடைமுறைக் கணக்குகளிற்குரிய இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் ரூபா 134,262 ஆகவும் காணப்பட்டன.

(ஈ) எழுதப்பட்ட காசோலைகளை தாமதிக்காது உரிய தரப்பினர்களிற்கு கையளிக்க வேண்டிய போதிலும், கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தினால் 2015 திசெம்பர் மாதம் எழுதப்பட்ட ரூபா 7,111,699 பெறுமதியான 147 காசோலைகளும் ஆசிரியர்களின் நிலுவைச் சம்பளத்திற்காக 2015 திசெம்பர் மாதம் எழுதப்பட்ட ரூபா 1,412,527 பெறுமதியான 06 காசோலைகளும் 2016 பெப்ரவரி மாத கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் உரிய தரப்பினர்களிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கல்வி, கலாச்சார மற்றும் கலை அலுவல்கள், விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவாகர, தகவல் தொழில்நுட்ப அமைச்சினால் 2015 திசெம்பர் மாதம் எழுதப்பட்ட ரூபா 41,579,614 பெறுமதியான 283 காசோலைகள் 2016 பெப்ரவரி மாத கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் உரிய தரப்பினர்களிற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.14 உள்ளூராட்சி அதிகாரசபை நடவடிக்கைகளை கண்காணித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் ஒன்பதாவது பட்டோலையின் 4.2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை மாகாண சபைகளிற்குக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வைக்காக முறையான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்காததுடன் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் கணக்குகளின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. மேலும் உள்ளூராட்சி அதிகாரசபைக் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு அபிப்பிராயம் மறுக்கப்பட்ட (Disclaimer Opinion) மற்றும் பாதகமான

அபிப்பிராயம் (Adverse Opinion) வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக மீளாய்வாண்டை உள்ளடக்கிய அண்மைய 05 ஆண்டுகளின் தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **ஆண்டு** | **கணக்காய்வு செய்யப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக்கூற்றுக்கள்) எண்ணிக்கை** | **கணக்காய்வு அபிப்பிராயம் மறுக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக்கூற்றுக்களின்) எண்ணிக்கை** | **பாதகமான அபிப்பிராயம் வழங்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் (நிதிக்கூற்றுக்களின்) எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 2011 | 48 | 20 | - |
| 2012 | 48 | 26 | - |
| 2013 | 48 | 04 | 25 |
| 2014 | 48 | 01 | 02 |
| 2015 | 26 | - | 01 |

(ஆ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேல் மாகாண சபையின் அதிகாரப்பிரதேசத்திலுள்ள 48 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிலுவை வருமானம் ரூபா 4,889,734,583 ஆக இருந்தது.

(இ) 13 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உத்தியோகத்தர்கள்/ ஏனையோருக்கு எதிராக கணக்காய்வாளர் தலைமையதிபதியால் விதிக்கப்பட்ட 57 மிகை அறவீடுகள் தொடர்பில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடுவதற்கிருந்த மிகை அறவீடுகளின் பெறுமதி ரூபா 36,252,371 ஆக இருந்தது.

(ஈ) உள்ளூராட்சி அதிகாரசபைகளில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக 2016 மே 30 வரை 22 உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு வழங்கப்பட்ட 155 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 7.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களும் செலவினங்களும் தொடர்புடைய முரண்களுடன் கீழுள்ளவாறாகும்.

| | **2015** | | | **2014** | | |
|---|---|---|---|---|---|---|
| | **பாதிடப்பட்ட** | **உள்ளபடியான** | **முரண்** | **பாதிடப்பட்ட** | **உள்ளபடியான** | **முரண்** |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **வருமானம்** | | | | | | |
| வரி வருமானம் | 33,130,020 | 31,540,490 | 1,589,530 | 28,284,973 | 28,112,653 | 172,320 |
| வரியல்லா வருமானம் | 2,760,154 | 3,268,552 | (508,398) | 2,992,291 | 2,979,182 | 13,109 |
| அரசாங்க மானியம் | 20,999,680 | 21,754,758 | (755,078) | 14,526,099 | 13,306,497 | 1,219,602 |
| மொத்தம் | 56,889,854 | 56,563,800 | 326,054 | 45,803,363 | 44,398,332 | 1,405,031 |

**செலவினம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனம் | 32,841,078 | 32,301,077 | 540,001 | 25,341,691 | 25,119,407 | 222,284 |
| ஏனைய மீண்டெழுபவை | 17,563,836 | 17,132,714 | 431,122 | 13,682,034 | 13,462,641 | 219,394 |
| மாகாண முதலீடுகள் | 6,484,940 | 5,283,724 | 1,201,217 | 6,779,637 | 5,863,476 | 916,161 |
| மொத்தம் | 56,889,854 | 54,717,515 | 2,172,340 | 45,803,362 | 44,445,524 | 1,357,839 |

## 7.2 வருடாந்த அறிக்கையினை சபையில் சமர்ப்பித்தல்

1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கடந்த ஆண்டுகளில் மேல்மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலை கீழே காட்டப்படுகின்றது.

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2010 | 2012 சனவரி 16 | 2012 மே 22 |
| 2011 | 2013 பெப்ரவரி 28 | 2013 திசெம்பர் 03 |
| 2012 | 2014 ஆகஸ்ட் 27 | 2015 சனவரி 20 |
| 2013 | 2014 திசெம்பர் 31 | 2015 யூன் 13 |
| 2014 | 2015 செப்தெம்பர் 18 | 2016 மே 03 |

## 7.3 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றல்

கம்பஹ மாவட்டத்திலுள்ள களனி மற்றும் நீர்கொழும்பு கல்வி வலயங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 232 பாடசாலைகளில் 13 இல் மலசலகூட வசதிகள் காணப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| விடயப்பரப்பு | குறைபாடு |
|---|---|
| (அ) கணக்கீடு | • தீர்க்கப்படாத கட்டுநிதி, அனுப்புதல்கள் மற்றும் வைப்புக்கள் காணப்படுகின்றமை<br>• கணக்குகளைச் சமர்ப்பிப்பதில் தாமதங்கள் |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | • மாகாண காணிகள் ஆணையாளர், மாகாண இறைவரி ஆணையாளர் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களில் நிலுவை வருமானங்களையும் மற்றும் வருமானங்களையும் சேகரிப்பதில் தாமதங்கள் நிலவுகின்றமை |
| (இ) உள்ளூராட்சி அதிகாரசபைகளின் மேற்பார்வை | • நிலுவை வருமானங்கள் மற்றும் அறவிடப்படாத மிகை அறவீடுகள் காணப்படுகின்றமை. |
| (ஈ) பதவியணியினர் | • கல்வி மற்றும் சுகாதார பதவியணியில் வெற்றிடங்கள் நிலவுகின்றமை |